[22nd October 1964

திரு. ஆ. தங்கவேலு : தனியார் பஸ்களில் இரண்டு டிக்கட் புத்தகங்கள் கொடுக்கப்பட்டு ஏறும் பிரயாணிகளின் பாதிப் பெயரை ஒரு புத்தகத்திலும் மற்றப் பாதிப் பெயரை மற்றொரு புத்தகத்திலும் போட்டு கணக்குகளை மறைத்து விடுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஓரளவு வரி ஏய்க்கப் படுகிறது என்பது தெரிகிறது. எந்தெந்த முறையில் ஏய்க்கிறார் கள் என்பது முழுவதும் தெரியாது.

திரு. ம. கமலநாதன் : குறிப்பாக சேலம் எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் ஏறியவுடன் டிக்கட் கொடுக்கப்பட்டு கிருஷ்ணகிரி வரும்போது டிக்கட்டைத் திரும்பப் பெறுவதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் தேதி குறிப்பிட்டு எந்த தினத்தில் நடந்தது, எந்த ரூட்டில் எப்படி நடக்கிறது என்ற விவரத்தை எழுதி அனுப்பினால் சர்க்கார் கண் காணிக்கத் தயாராக இருக்கிறார்கள்.

திரு. ஏ. ஆறுமுகம் : சர்க்கார் எக்ஸ்பிரஸ் பஸ்களிலாவது சட்டசபை அங்கத்தினர்களுக்கு டிக்கட் கொடுப்பதிலே சலுகை காட்ட முன் வருவார்களா ?

கனம் சபாநாயகர் : டிக்கட் 'ஃப்ரீ' ஆகக் கொடுக்க வேண்டு மென்று கனம் அங்கத்தினர் சொல்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் பள்ளிக்கூடத்துப் பையன் மாதிரி இருக்கின்றார். ஆகவே, அரை டிக்கட் கேட்கிறாரோ என்னவோ ? (சிரிப்பு.)

ரசாயன உரத்தொழிற்சாலை

* 58 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தமிழ் நாட்டில் ரசாயன உரத்தொழிற்சாலை ஒன்று நிறுவுவ தற்கு சர்க்கார் உத்தேசித்துள்ளதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government of India have approved in principle the proposal to locate a fertilizer factory in Madras State in the public sector.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த ரசாயன உரச் சாலையை எந்த மாவட்டத்தில் ஆரம்பிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்னை நகரத்தில் பெட் ரோலியம் ரிஃபைனரியைச் சேர்த்து ஆரம்பிக்க உத்தேசம்.

திரு. ர. ஜீவரத்தினம் : சென்னை நகரத்திலே ஏராளமான தொழில்கள் பெருகி இடவசதி இல்லாத காரணத்தால் சென்னையை அடுத்தாற்போன்று இருக்கின்ற வட ஆற்காடு ஜில்லா விலே அந்த உரத்தொழிற்சாலையை ஆரம்பிக்க சர்க்கார் முன் வருவார்களா ?

22nd October 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது நிபுணர்கள் பார்த்து ஆலோசனை செய்கிற விஷயம். நிபுணர்கள் பல இடங்களையும் பார்வையிட்டு சென்னையில் ரிஃபைனரியின் பக்கத்தில் வைப்பது தான் சரி என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

திரு. சா. கணேசன் : பெட்ரோல் ரிஃபைனரிக்குப் பக்கத்தில் இதை அமைப்பதால் பொருளாதாரத்திலோ அல்லது பிற வகையிலோ இதற்குச் சாதகம் ஏற்படும் என்ற நிலை இல்லாவிட்டால், உர விநியோகம் எங்கே அதிகமாகச் செல்கிறதோ, அந்த இடத்தில் மத்திய பாகத்தில் அதை அமைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ரிஃபைனரிக்குப் பக்கத்தில் வைத்தால்தான் செலவு குறைவாக இருக்கும், எகனாமிக்காக இருக்கும் என்று நிபுணர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தத் தொழிற்சாலையில் எந்த எந்த வகை உரங்கள் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ? அவற்றுக்குத் தேவையான மூலப் பொருள்கள் இந்த ராஜ்யத்தில் என்னென்ன கிடைக்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது யோசனையில் இருக்கிறது. இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இதிலே ரிஃபைனரி மிகவும் முக்கியமானது.

அங்கீகாரம் பெற்ற நர்சரிகள்

***59 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவைகளில் நடப்படும் பழமரங்களை வாங்குவதற்கென சர்க்காரின் அங்கீகாரம் பெற்ற நர்சரிகள் இருக்கின்றனவா ?

(இ) ஆமெனில், இந்த மாநிலத்தில் எத்தனை நர்சரிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது ?

(உ) அந்த நர்சரிகளில் விலைகள் சர்க்காரால் நிச்சயிக்கப் பட்டுள்ளனவா ?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) Thirty-six (36) nurseries were recognised during 1964-65.

(c) No.

திரு. து. ப. அழகமுத்து : பஞ்சாயத்து யூனியன் பழ மரங்கள் போன்றவற்றை வாங்கவேண்டுமென்று சொன்னால் குறிப்பிட்ட சில நர்சரிகளில்தான் வாங்கவேண்டுமென்று நிர்ப்பந்திப்பதால் அவர்கள் விலையை அதிகமாக வைத்து விற்கிறார்கள். அதை விடக் குறைந்த விலைக்கு வெளியிலே கிடைக்கின்றன. ஆகவே, இந்த நியதியை மாற்றுவார்களா ?